# குறுந்தொகைக் காட்டும் பறவைகள்

*முனைவர் பேரா. க. அழகர்*
மேனாள் முதல்வர்
மகாத்மா காந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (இருபாலர்)
சோலைசேரி

மலர்: 12
சிறப்பிதழ்: 1
மாதம்: மே
வருடம்: 2025
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI: https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8972

## முன்னுரை

குறுந்தொகை அகப்பொருள் பற்றிய 400 பாடல்களைக் கொண்டது. ஆசிரியப்பாவால் அமைந்த பாடல்களை 205 புலவர்கள் பாடியுள்ளனர். நாலடிச் சிற்றெல்லையும், எட்டடிப் பேரெல்லையும் உடையது. 307, 391வது பாடல்கள் மட்டும் ஒன்பது அடிகளை உடையது. பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியுள்ளார்.

தொகுத்தவர் பூரிக்கோ, தொகுப்பித்தவர் யார் என்று தெரியவில்லை. குறுகிய அடிகளைக் கொண்ட தொகுப்பு என்பதால் குறுந்தொகை எனப்பெயர் பெற்றது. குறுந்தொகையில் 396 பாடல்கள் நேரிசை ஆசிரியப்பாவாலும், ஐந்து பாடல்கள் 16, 19, 93, 113, 222 பாடல்கள் நிலைமண்டில ஆசிரியப்பாவாலும் பாடப்பட்டவை.

இந்நூலில் ஐவகை நிலங்கள் குறுநில மன்னர்கள், வள்ளல்கள், மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், பண்டமாற்றுமுறை, விலங்கினங்கள், பறவையினங்கள் பற்றிய செய்திகள் காணப் படுகின்றன. அந்த வகையில் பறவைகள் பற்றிய செய்திகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## பறவைகள்

சுமார் 58 பறவைகள் குறித்துச் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டு உள்ளன. கிளி, மயில், மலையுறை, குருவி, வங்கா ஆகியவை சங்க இலக்கியம் காட்டும் குறிஞ்சி நிலப்பறவைகளாகும். கானக்கோழி, குயில், தூக்கணாங்குருவி, புறா, மாடப்புறா போன்றவை முல்லை நிலப்பறவைகளாகும். காக்கை, அண்டங்காக்கை, கம்புள் கோழி, நீர்க்கோழி, நிலக்கோழி, மனைக்கோழி, குருவி ஆகியவை மருத நிலப் பறவைகளாகும். அன்றில் அன்னம், குருகு, வெண்பூக்குருகு, வெள்ளாங்குருகு, சிறுவெள்ளாங்குருகு, கொக்கு, சிரல் (மீன்கொத்தி) சிறு வெண்காக்கை, நாரை போன்றவை நெய்தல் நிலப் பறவைகளாகும்.

ஆந்தை, ஊமன், வானம்பாடி, குடிஞை, குரால், கூகை, எழில், குடுமி எழால், குழுகு, எருவை, கௌதாரி, காடை, பாறு, பொகுவல் ஆகியவை பாலைநிலப் பறவைகளாகும்.

**பறவைகள் - பொருள் விளக்கம்**

சங்க இலக்கியம் பறவைகளைப் புல்லினங்கள் பறவை என்பது என்று வர்ணிக் கிறது. பறப்பதற்கு உதவும் சிறகுகளை உடலின் இருபக்கங்களில் கொண்ட, இருகால்களும் அலகும் உடைய, முட்டையிட்டுக் குஞ்சிப் பொரிக்கும் ஓர் உயிரினமே பறவையாகும் எனப் பொருள் கூறுகிறது. (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ப. 888).

இயற்கைச்சூழலில் பறவைகளைக்கூர்ந்து கவனித்தல் அவற்றின் உடல் அமைப்பு, பறக்கும் விதம், வாழிடம் உண்ணும் உணவு போன்றவற்றைக் கவனித்துக் குறிப்பெடுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய செயல்பாடுதான் பறவையைப் பார்த்தல் ஆகும். "மாவும் புள்ளும் ஐயறி விளவே" என்கிறார் தொல்காப்பியர். பார்ப்பு, பிள்ளை, பிறழ்குடி என்பவை பறவைகளின் இளமைப் பெயர்களாக அறியப்படுகின்றன.

**அன்னப்பறவை**

நீண்டு வளைந்த கழுத்தையும், சவ்வினால் இணைந்த விரல்களையும் உடைய வாத்து போன்று இருக்கும் வெண்ணிற நீர்ப்பறவை தான் அன்னப்பறவை எனப் பொருள் கூறுகிறது. "க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி ப. 82). மேலும் புராணத்தில் பாலையும், நீரையும் கலந்து வைத்தால் பாலை மட்டும் பிரித்து உண்ணும் தன்மை உடைய ஒரு வெண்ணிறப் பறவை என்பர். இலக்கியத்தில் பெண்களின் நடைக்கு அன்ன நடையை சான்றாகக் கூறுவர். நீர் நிலையில் விளையாடிய அன்னப்பறவையை ஆகாயத்தில் மேலே உயரப் பறந்த செய்தியைக் குறுந்தொகைச் சுட்டும்

**"மின்னுச் செய் கருவிய பெயல் மழை தூங்க**
**விசும்பு ஆடு அன்னம் பறை நிவந்தாங்கு"**

**(குறுந் - பா. 205)**

மருத நிலத்து அன்னப்பறவை நெய்தல் மணற்பரப்பிலும் தங்கும் என்பதை குறுந்தொகை பாடல் மூலம் அறியலாம்.

**"குறுங்கால் அன்னம் குவவுமணல் சேக்கும்"**

**(குறு - பா. 300)**

இக்கருத்தையே நளவெண்பாவில் அறியலாம்.

**"நாடிமட அன்னத்தை நல்ல மயிற்குழாய்**
**ஓடி வளைக்கின்றது ஒப்பவவே - நீடியநல்**
**பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடு போந்து"**

**(நளவெண்பா - பா. 32)**

**அன்றில் பறவை**

அன்றில் பறவை நெய்தல் நிலத்தில் வாழும் பறவையினம். இதன் தலை நெருப்பைப் போன்ற சிவப்பு நிறம் உடையது. கடலோரப் பனைமரக் கொம்புகளில் கூடுகட்டிக் கொண்டு வாழும். இதன் உணவு மீன் ஆகும். அன்றில் தன் துணையுடன் சேர்ந்தே வாழும். இறா மீனைப் போன்ற வளைந்த வாயை உடையது. அன்றில் பறவையானது தடா மரத்தின் உயர்ந்த கிளையிலுள்ள தன் கூட்டிலிருந்து நள்ளிரவு நேரத்தில் ஒலி எழுப்பும் என்பதைக் குறுந்தொகை மூலம் அறியலாம்.

**"நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்**
**இறவின் அன்ன கொடவாய்ப் பெடையொடு**
**தடவின் ஓங்குசினைக் கட்சியில் பிரிந்தோர்**
**கையா நரலும் நள்ளென் யாமத்துப்"**

**(குறுந் - பா. 160)**

அன்றில் ஒரு கண் துயின்று, ஒரு கண் ஆர்வத்தால் தன் துணைமேல் வைத்து உறங்கும் அன்புடைய பறவையாகும். இக்கருத்தையே அகநானூறு குறிப்பிடும்.

**"மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில்**
**துணைஒன்று பிரியினும் துஞ்சா காண்"**

**(அகம் - பா. 50)**

துணை சேர்ந்த அன்றில் பறவைகளுள் ஒன்று அருகில் இல்லாத காலத்தில் மற்றொன்று தனிமையில் இருந்து இறந்தே போய்விடும் என்பதை நற்றிணை மூலம் அறியலாம்.

**"ஒன்று இல் காலை அன்றில் போலப்**
**புலம்பு கொண்டு உறையும் புன்கன் வாழ்க்கை"**

**(நற் - பா. 124)**

**கூகை**

கூகை என்றால் ஆந்தை என்று பொருள். குறிப்பாக இரவில் அதிக நேரம் செயல்படும் ஒரு பறவை. இப்பறவைக்கு இரவில் தான் கண் தெரியும். இதற்குக் கோட்டான் என்ற பெயரும் உண்டு.

***"குன்றக் கூகை குழறினும்"***

***(குறுந்தொகை - பா. 153)***

***"கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்"***

***(குறுந்தொகை - பா. 393).***

**குயில்**

குயில் என்பது முல்லை நிலப் பறவையாகும். பொன்னிறப் பூந்தாது படிதலால் மின்னும் சிறகையுடைய கருங்குயில், மாமரக் கிளையில் பூத்த மலர்களில் உள்ள நறுமண மகரந்தப் பொடியைக் கோதும்.

***"மின்னின் தூவி இருங்குயில் பொன்னின்
உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்"***

***(குறுந் - பா. 192)***

**நாரை**

சதுப்பு நிலங்களிலும், நீர்நிலைகளிலும் தடித்த நீண்ட அலகுகளும் கொண்ட ஒரு பறவையே நாரையாகும். நாரை ஆரல் மீனையும், அயிரை மீனையும் உண்ணும்

***"ஆரல் அருந்த வயிற்ற நாரை"***

***(குறுந் - பா. 114)***

***"வெண்பறை நாரை நிரை பெயர்ந்து அயிரை ஆரும்"***

***(குறுந் - பா. 166)***

***"நின்ற புன்னை நிலம் தோய் படுசினை
வம்ப நாரை சேக்கும்"***

***(குறுந் - பா. 236)***

***"கவிர் இதழ் அன்ன தூவிச் செவ்வாய்
இரைதேர் நாரைக்கு எவ்வம் ஆகத்"***

***(குறுந் - பா. 103)***

**சிறு வெண்காக்கை**

கழுத்தில் சிறிதளவு வெண்மை நிறத்தை உடைய காக்கையே சிறுவெண் காக்கையாகும். இக்காக்கை குளிர்ந்த நீர்க் கழிகளிலுள்ள மீன் உணவினைத் தேடும்.

***"பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை"***

***(குறுந் - பா. 246)***

***"சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பெருந்தோடு
ஏறிதிரைத் திவலை ஈர்ம்புறம் நனைப்பப்"***

***(குறுந் - பா. 334)***

**கொக்கு**

ஈட்டி போன்ற கூர்மையான அலகும், வளைந்த கழுத்தும், நீண்ட கால்களும் கொண்ட சதுப்பு நிலங்கள் மற்றும் நீர் நிலைகளில் காணப்படும் வெள்ளை நிறப்றவைக் கொக்கு ஆகும். ஆம்பல் மலரைப் போன்ற மழைத்துளிபட்ட கொக்கின் பார்வையைக் கண்டு தண்ணீரில் நனைந்த நண்டு அஞ்சும்.

***"மாரி ஆம்பல் அன்ன கொக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு"***

***(குறுந் - பா. 117)***

**தூக்கணங்குருவி**

கிளைகளிலிருந்து தொங்கும், நீண்ட கூடுகளை நாரினால் கட்டும், தடித்த கூம்பு போன்ற அலகும், உடலில் அடர் பழுப்பு நிறப் பட்டைகளும் கொண்ட குருவியாகும்.

***"முடங்கல் இறைய தூக்கணங்குரீகி
நீடு இரும் பெண்ணைத் தொடுத்த"***

***(குறுந் - பா. 374)***

**பருந்து**

கழுகு இனத்தைச் சேர்ந்த வளைந்த கூர்மையான அலகும், கூர்மையான விரல் நகங்களும் கொண்ட இரைக் கொல்லிப் பறவை பருந்து ஆகும். பாலை நிலத்திலுள்ள ஓமை மரத்தின் கிளையில் தன்பெடையை நீங்கிய பருந்து தன் அழைப்பொலியை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும்.

***"அத்த ஓமை அம்கவட்டு இருந்த***
***இமைதீர் பருந்தின் புலம்கொள் தெள்விளி"***

***(குறுந் - பா. 207)***

***"பருந்து இளைப்படூஉம் பாறுதலை ஓமை" என்றிது***

***(அகநானூறு பா. 21)***

### கோழி

*காட்டுப்பூனைகள் கோழிக் குஞ்சுகளை உணவாகக் கொள்வன. எனவே தனது குஞ்சுகளை வெருகு கவரும் என்ற அச் சத்தில் கோழி ஒலி எழுப்பும்.*

***"மனை உறை கோழிக் குறுங்காற்பேடை***
***வேலி வெருகினம் மாலை உற்றென"***

***(குறுந் - பா. 139)***

***"குப்பைக் கோழித் தனிப்போர் போல"***

***(குறுந் - பா. 305)***

### வௌவால்

*பழுத்தபழ மரங்களை நாடிப் போகும் பறவை வௌவால் ஆகும்.*

***"தாஅவல் அஞ்சிறை நொப்பறை வாவல்***
***பழுமரம் படரும் பையுள் மாலை"***

***(குறுந் - பா. 172)***

### கிளி

*கிளி தினைக் கதிரை உண்ணுவதையும், தினைப்புனம் காக்கும் பெண்கள் கிளியை வெரட்ட மூங்கிலால் செய்யப்பட்ட குளிர் என்னும் கருவியைப் பயன்படுத்திய செய்தியைக் காணலாம்.*

***"சிறுதினை கிளி குறைத்து: உண்ட கூழை***
***இருவி"***

***(குறுந் - பா. 133)***

### குருகு

*குருகின் நிறம் வெள்ளைத் தாமரை போல் இருக்கும். குளத்திலும் மேயும், கடற்கழியல் உள்ள தாழம்பூ புதரில் கூட்டமாக உறங்கும். புன்னை மரங்களில் குருகு கூடு கட்டி முட்டையிடும். மரத்தில் தொங்கும் வௌவால்களையும் விரும்பி உண்ணும். நண்டை உண்ணும் யாழ் இசை போல ஒலி எழுப்பும், பனிக்கு நடுங்கும். குருகிடமிருந்து தப்பிய கெண்டை மீன் வெண்டாமரையைக் கண்டு அஞ்சியதாம் ஏன் அதுவும் அம்மீனுக்கு நாரை போலத் தோற்றம் அளித்ததாம்.*

***"குருகு கொளக் குளித்த கெண்டை அயலது***
***உருகெழு தாமரை வான்முகை வெரூஉம்"***

***(குருந் - பா. 127)***

### முடிவுரை

*குறுந்தொகையில் வெவ்வேறு பறவைகளின் இருப்பிடம், உணவு, செயல்கள் பற்றியச் செய்திகள் கூறப்பட்டு உள்ளதை அறியலாம்.*